www.freetnbooks.com

HSM

12 - ஆம் வகுப்பு

# அரையாண்டுத் தேர்வு - 2025

## பொதுத் தமிழ்

காலம் : 3.00 மணி

மதிப்பெண்கள் : 90

அறிவுரைகள் : 1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதைச் சரிபார்த்துக் கொள்ளவும். 2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். 3) விடைகள் தெளிவாகவும் குறிப்பிட்ட அளவினதாகவும். சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி - I

குறிப்பு : 1) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 2) கொடுக்கப்பட்ட நான்கு தெரிவுகளில் பொருத்தானதைத் தெரிவு செய்து குறியீட்டு எழுதவும். 14 X 1= 14

1. "செம்பரிதி ........." எனத் தொடங்கும் பாடல் இடம் பெற்றுள்ள கவிதைத் தொகுப்பு
அ) ஒளிப்பறவை ஆ) நிலவுப்பூ இ) சர்ப்பயாகம் ஈ) சூரிய நிழல்

2. பொருத்தி விடையைத் தேர்க.

| சொல் | | பொருள் |
|---|---|---|
| அ) செற்றார் | - | 1. மகிழ்ச்சி |
| ஆ) கிளை | - | 2. காடு |
| இ) உவகை | - | 3. பகைவர் |
| ஈ) கானம் | - | 4. உறவினர் |

3, 4, 1, 2

அ) 2, 4, 3, 1 ஆ) 3, 4, 1, 2 இ) 2, 4, 1, 3 ஈ) 3, 2, 4, 1

3. 'கிறித்துவக் கம்பர்' என்று அழைக்கப்படுபவர் யார்?
அ) கால்டுவெல் ஆ) ஜி.யு. போப்
இ) வேதநாயகர் ஈ) எச்.ஏ. கிருட்டினனார்

4. சென்னை வெறும் நகரம் மட்டுமன்று, அது நம்பிக்கை மையம் - காரணம்
அ) நேரடி, மறைமுக வேலைவாய்ப்புகளின் களம்
ஆ) மென்பொருள், வன்பொருள், வாகன உற்பத்தியில் பங்கு
இ) மென்பொருள் ஏற்றுமதியில் முன்னிலை
ஈ) அ, ஆ, இ - அனைத்தும்

5. 'குடும்பம்' என்னும் சொல் முதன்முதலில் இடம் பெற்றுள்ள நூல்
அ) தொல்காப்பியம் ஆ) திருக்குறள்
இ) குறுந்தொகை ஈ) புறநானூறு

6. திரைப்படத்தில் கதையும் சொல்லலாம் என்பதை முதன்முதலில் நிகழ்த்திக் காட்டியவர் ......... .
அ) லூமியர் சகோதரர்கள் ஆ) ஜார்ஜ் மிலி
இ) தாமஸ் ஆல்வா எடிசன் ஈ) சாமிக்கண்ணு வின்சென்ட்

7. செல்லிடத்து (செல் + இடத்து) - புணர்ச்சி விதி யாது?
அ) தனிக்குறில் முன் ஒற்று உயிர் வரின் இரட்டும்
ஆ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்
இ) ஈறுபோதல்
ஈ) பூப்பெயர் முன் இன மென்மையும் தோன்றும்



www.freetnbooks.com | FREETNBOOKS

www.freetnbooks.com

8. புதுப்பெயல்- இலக்கணக்குறிப்பு தருக.
அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை
இ) அன்மொழித்தொகை ஈ) உவமைத் தொகை

9. தமிழில் திணைப் பாகுபாடு .......... அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.
அ) பொருட்குறிப்பு ஆ) சொற்குறிப்பு இ) தொடர்க் குறிப்பு ஈ) எழுத்துக்குறிப்பு

10. 'நகை' என்னும் மெய்ப்பாடு தோன்றும் நிலைக்களன்களுள் ஒன்று ............... .
அ) கொடை ஆ) பிணி இ) பேதைமை ஈ) செல்வம்

11. அதிவேகமாக வாகனங்களை இயக்கினால் விதிக்கப்படும் தண்டத் தொகை எவ்வளவு?
அ) முதல் முறை ரூ. 1000 முதல் 5000 ஆ) மறுமுறை ரூ. 2000
இ) ரூ. 25000 ஈ) அ, ஆ, சரி இ தவறு

12. ஈற்றடி எழுதித் துளிப்பாவை நிறைவு செய்க. பூட்டிய வீட்டிலும் பூத்துச் சிரிக்கிறது ............... .
அ) முல்லை ஆ) பாலை இ) புயல் ஈ) மழை

13. 'ARCHAELOGY' கலைச் சொல் தருக.
அ) மானுடவியல் ஆ) கள ஆய்வு இ) கல்வெட்டியல் ஈ) தொல்லியல்

14. கீழ்க்காணும் தொடர்களில் மரபு பிழை இல்லாத தொடர் எது?
அ) முருகன் சோறு சாப்பிட்டுப் பால் பருகினான் ஆ) முருகன் சோறு உண்டு பால் குடித்தான்
இ) முருகன் சோறு உண்டு பால் பருகினான் ஈ) முருகன் சோறு சாப்பிட்டுப் பால் குடித்தான்

## பகுதி - II

### பிரிவு - 1

**குறிப்பு : எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3 X 2 = 6

15. கவிஞர் சிற்பி எவற்றை எவற்றை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார்?
16. சினத்தால் வரும் கேட்டினைக் கூறுக.
17. சிலப்பதிகாரத்திற்கு வழங்கும் வேறு பெயர்கள் யாவை?
18. இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?

### பிரிவு - 2

**குறிப்பு : எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2 X 2 = 4

19. இந்தோ - சாரகனிக் கட்டடக்கலை - குறிப்பு வரைக.
20. புக்கில், தன்மனை - சிறு குறிப்பு எழுதுக.
21. பருவத்தே பயிர் செய் - நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக.

### பிரிவு - 3

**குறிப்பு : எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** 7 X 2 = 14

22. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
அ) தலை, தளை, தழை ஆ) கலை, களை, கழை

23. பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடர் அமைக்க.
அ) குமரன் வீடு பார்த்தேன் ஆ) மாறன் பேச்சுத்திறன் யார் வெல்ல முடியும்

24. தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.
அ) ரங்கன் வெங்கலப் பாத்திரக் கடை வைத்திருக்கிறார்.
ஆ) ஐப்பசி அடைமழையில் ஊருணி நிறைந்தது.



www.freetnbooks.com | FREETNBOOKS

www.freetnbooks.com

25. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடர் அமைக்க.
அ) கோவில் (அல்லது) தலைமை

26. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.
அ) புள்ளைக்கு உடம்பு சரியில்லை மூணு நாளா சிரமப்படுகிறது
ஆ) ரவைக்கு சித்தப்பன காவலுக்குப் போவ சொல்

27. மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.
அ) கண்துடைப்பு
ஆ) ஆற அமர

28. கீழ்காணும் நான்கு சொற்களைக் கொண்டு தொடர் எழுதுக.
அ) வானம், பற, நிலவு, தொடு
ஆ) குதிரை, வேகம், ஓடு, தாவு

29. ஏதேனும் ஒன்றனுக்கு பகுபத உறுப்பிலக்கணம் தருக.
அ) பொலிந்தான்
ஆ) துஞ்சல்

30. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக..
அ) தலைக்கோல்
ஆ) முன்னுடை

## பகுதி - III

### பிரிவு - 1

**குறிப்பு : எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2 X 4 = 8

31. பங்குனி உத்திரத் திருவிழா நடைபெற்ற முறையைத் திருஞான சம்பந்தர் எவ்வாறு பதிவு செய்கிறார்?
32. ஒரு முக எழினி, பொருமுக எழினி, கரந்துவரல் எழினி - விளக்குக.
33. ஈசன் மகன் நின்றனர் ஓர் ஏழையென ஓர்மின் - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
34. வாடைக் காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?

### பிரிவு - 2

**குறிப்பு : எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக.** 2 X 4 = 8

35. சென்னை அறிவின் நகரம் என்பதைச் சான்றுகளுடன் விளக்குக.
36. மணந்தகம் - விளக்குக.
37. நீங்கள் ஆசிரியரானால் மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிப்படுத்துவீர்கள்?
38. திரைபடத்தின் காட்சி ஆற்றலை எடுத்துக்காட்டும் புலப்படுத்துக.

### பிரிவு - 3

**குறிப்பு : எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 4 X 4 = 12

39. அ) எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.
- இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக. *(அல்லது)*
ஆ) எடுத்துக்காட்டு உவமையணியைச் சான்றுடன் விளக்குக.



www.freetnbooks.com | FREETNBOOKS

www.freetnbooks.com

40. இலக்கிய நயம் பாராட்டுக (மையக் கருத்து - எவையேனும் மூன்று நயங்கள்)

பூமிச்சருகாம் பாலையை
    முத்து பூத்த கடல்களாக்குவேன்
புயலைக் கூறுபடுத்தியே - கோடிப்
    புதிய தென்றலாக்குவேன்
இரவில் விண்மீன் காசினை - செலுத்தி
    இரவலரோடு பேசுவேன்
இரவெரிக்கும் பரிதியை - ஏழை
    விறகெரிக்க வீசுவேன்

- நா. காமராசன்

41. அ) வாகைத் திணையைச் சான்று தந்து விளக்குக. ***(அல்லது)***
ஆ) பொருண்மொழிக் காஞ்சித் துறையைச் சான்று தந்து விளக்குக.

42. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.
அ) கூடி வாழ்ந்தால் கோடி நன்மை ***(அல்லது)***
ஆ) அகத்தின் அழகு முகத்தில் தெரியும்

43. தட்டச்சர் பணி வேண்டி விண்ணப்பம் எழுதுக.

## பகுதி - IV

**குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** 3 X 6 = 18

44. அ) சினத்தைக் காத்தல் வாழ்வை மேன்மைப்படுத்தும் – இக்கூற்றை முப்பால் வழி விரித்துரைக்க.
*(அல்லது)*
ஆ) பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன், பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவுநிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக.

45. அ) மயிலை. சீனி. வேங்கடசாமி 'ஓர் ஆராய்ச்சிப் பேரறிஞர்' என்பதனைச் சான்றுகளுடன் நிறுவுக.
*(அல்லது)*
ஆ) பண்டைக் காலம் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல் கற்பித்தல் முறைகளைத் தொகுத்து எழுதுக.

46. அ) நடிகர் திலகத்தைக் கண்ட பாலசந்திரனின் நினைவலைகளை நயத்துடன் புலப்படுத்துக.
*(அல்லது)*
ஆ) உரிமைத் தாகம் கதையில் வெளிப்படும் உறவின் மேன்மையைப் புலப்படுத்துக.

## பகுதி - V

4 + 2 + 6

47. **அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக.**

அ) குகனொடும் ஐவர் ஆனோம் .................. எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலை எழுதுக.

ஆ) 'செயல்' என முடியும் குறளை எழுதுக.



www.freetnbooks.com | FREETNBOOKS